# கப்ருஸ்தானும் நாமும்

**காஜி A.M.M. காதர் பக்ஸ் ஹுசைன் ஸித்தீக்கி M.A.,**
**டவுன் காஜி - கீழக்கரை**

முஸ்லிம்கள் புதிய குடியேற்றங்கள் அமையும் போது முதலில் ஏக இறைவனாகிய அல்லாஹ்வை வணங்குவதற்காக மஸ்ஜிதை நிர்மாணிப்பதுடன் முஸ்லிம்களின் மைய்யித்தை அடக்கம் செய்ய கப்ருஸ்தானுக்கு ஓர் இடத்தையும் அதன் அருகில் தேர்ந்தெடுத்துக் கொள்வது மரபு மஸ்ஜித் அருகில் கப்ருஸ்தான் அமைகிற போது மக்களின் பார்வை அதன் மீது அதிகம் பட வாய்ப்பு கிட்டுகிறது. நாமும் ஒருநாள் அந்த மண்ணறையில் செல்ல வேண்டி வரும் என்ற சிந்தனை தூண்டப்படுகிறது. அடக்கப்பட்டவர்களுக்கு ஸலாம் கூறி ஜியாரத் செய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பெரும் செல்வந்தராகவும் மகத்தான வள்ளலாகவும் வாழ்ந்து வழிகாட்டிய கலிபா ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் கப்ரு பக்கமாக செல்ல நேர்ந்தால் அவர்களது தாடி நனையுமளவிற்கு அழுவார்கள். சுவர்க்க நரகங்கள் பற்றிக் கூறப்படும் போது தாங்கள் இவ்வளவு அழுவதில்லையே ! என ஒருவர் கேட்டதற்கு கப்ரு என்பது மறுமையின் தங்குமிடங்களில் முதல் தங்குமிடம் எனவே ஒருவர் அதில் (வேதனையை விட்டும்) தப்பி விட்டால் அதன்பின் உள்ள இடங்கள் அதைவிட எளிதாகி விடும்! அதில் ஒருவர் தப்பவில்லையாயின் அதன் பின் உள்ள இடங்கள் கடுமையாகி விடும் என்றும், நான் கப்ரைவிட பயங்கரமான எந்தக் காட்சியையும் கண்டதில்லை' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றுள்ளேன் எனவும் எடுத்துரைத்தார்கள்.

## மண்ணறையில் என்ன நடக்கிறது?

நீங்கள் அச்சமடைந்து இறந்தவர்களை கப்ரில் அடக்காது விட்டு விடுவீர்களோ என்ற பயம் மட்டும் எனக்கு இல்லாதிருந்தால் உங்களுக்கு கப்ருடைய வேதனையைக் கேட்கும்படியாகாது செய்திருப்பேன். மனித ஜின் வர்க்கத்தார்களைத் தவி மற்ற எல்லா உயிரினங்களும் கப்ருடைய வேதனையைக் கேட்கின்றன என அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் இரு கப்ருகளின் அருகே சென்ற போது அவர்கள் (இந்த) இருவர் மீது வேதனை செய்யப்படுகிறது. ஆனால் அவர்கள் (தாம் செய்த) பெரும் (பாவச்) செயலுக்காக வேதனை செய்யப்படவில்லை என்று கூறிய பின் ஆம்! அறிந்து கொள்ளுங்கள் அவ்விருவரில் ஒருவர் கோள் மூட்டும் பொருட்டு (அங்குமிங்கும்) நடமாடிக் கொண்டிருந்தார். மற்றொருவர் தம் சிறுநீரை விட்டும் துப்புரவாக இருந்ததில்லை என்று கூறி பின்னர் ஈரமுள்ள (பச்சைக்) குச்சியை (மரக்கிளையை) கொண்டு வரச்செய்து அதனை இரண்டாக முறித்து ஒவ்வொரு கப்ரிலும் ஒரு கிளையை (ஊன்றி) வைத்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்ட போது இவைகள் உலராமலிருக்கும் வரை அவ்விருவருக்கும் (வேதனை) இலேசாக்கப்படலாம் என கூறியதாக இபுனு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புஹாரி, முஸ்லிம், அபுதாவூத் – திர்மதி, நஸாஈ)

இதன் காரணமாகத்தான் மைய்யித்தை நாம் அடக்கம் செய்த பின் அதன் மீது பசுமையான கிளைகளை நடுகிறோம். கப்ருகள் பசுமையாக இருப்பதை விரும்பி செடிகளை மரங்களை நடுகிறோம். தழைத்து வளரும் செடி கொடிகளை கொண்டு கப்ருகளுக்கு அல்லாஹ் வேதனையை இலேசாகக் கூடும் என நம்புகிறோம். (மஸ்ஜிதை பரிபாலனம் செய்யும் ஜமாஅத் மஹல்லா நிர்வாகிகள், முத்தவல்லிகள், டிரஸ்டிகள் தங்கள் நிர்வாகப் பொறுப்பிலுள்ள கப்ருஸ்தான்களையும் சுத்தமாகவும், பசுமையாகவும் வைத்து பராமரிக்க வேண்டியது அவர்கள் மீது கடமையான பொறுப்பாகும். கப்ரின் பக்கம் மரம் இருந்தால் அதனை வெட்டுவது மக்ருஹ் என உள்ள போது கப்ருஸ்தானில் மரங்களை வெட்டி அதன் மூலம் பள்ளிக்கு வருமானத்தை உண்டாக்கிட முயற்சிப்பார்கள். இதனை உணர வேண்டும். ஆனால் கப்ருஸ்தானில் முளைத்த மரம் செடிகளில் உள்ள காய் கனிகள் 'ஹலால்' ஆகும். எனினும் அதை விற்று கப்ருஸ்தானுக்குத் தேவையான செலவு செய்வது ஏற்றம் (நஃபாயிஸுல் மஙானி)

## கப்ருஸ்தானை பாதுகாக்க வேண்டும்

சில பகுதிகளில் கப்ருஸ்தான்கள் நடைபாதையாகவும் குப்பை மேடாகவும் மிருகங்களின் புகலிடமாகவும் சிறுவர்கள் விளையாட்டு அரங்கமாகவும் ஆக்கப்பட்டு கவனிக்கப்படாமலிருப்பதை அதன் பொறுப்பாளர்கள் கவனிக்க வேண்டும். கப்ருஸ்தான்களை சுத்தம் செய்கிறோம் என்ற பெயரால் வேலை ஆட்களைக் கொண்டு அதை சிலர் தரைமட்டமாக்கி விடுகின்றனர். செடிகள் பிடுங்கப்படுவதால் அதன் பசுமையான சூழல் பாதிக்கப்படுகின்றது.

கப்ருகளின் மீது உட்காருவது அதை மிதிப்பது அதன் மீது நித்திரை செய்வது அதன்மீது சிறுநீர், மலம் கழிப்பது அதன் மீது முளைத்துள்ள செடி கொடிகளை பிடுங்குவது 'மக்ரூஹ்' ஆகும்.

காய்ந்த செடி கொடிகளை பிடுங்குவது தவறல்ல (பிக்ஹின் கலைக் களஞ்சியம்) ஹஸ்ரத் அம்ர் பின் ஹஸம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒருமுறை 'கப்ரு' மீது அமர்ந்து படித்துக் கொண்டிருந்த என்னைக் பெருமானார் (ஸல்) அவர்கள் "உள்ளே இருப்பவருக்கு துன்பம் கொடுக்காதீர் இதை விட நிலக்கரியின் கங்கன் மீது அமர்ந்து உனது ஆடையையும் தோலையும் நீர் எரித்துக் கொள்வது மேல் என சொன்னார்கள் (அஹ்மது, முஸ்லிம், அபூதாவூத், நஸஈ, இபுனுமாஜா)

## கப்ருகள் மேல் கட்டிடம் கூடாது

கப்ருகள் இருந்த இடம் என தெரிந்திருந்தும் இன்று பல இடங்களில் கப்ருஸ்தான்களை சுற்றி, கடைகளை கட்டுவதும், அதில் கக்கூஸ்கள், கார்ஷெட் உண்டாக்குவதும் கல்விக்கூடங்களை அமைப்பதும் நடைபாதைகளை உண்டாக்கி தளமிடுவதும் சாதாரணமாக நிகழ்கிறது இவை யாவும் தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

சில இடங்களில் சுந்தூரி காலங்களில் சோறு ஆக்கவும் (ரமலான் காலங்களில் பெரும் பெரும் சட்டிகளை வைத்து கஞ்சி காய்ச்சவும் மற்றும் செத்தைகளை ஒன்று கூட்டி, தீயிடவும் செய்யப்படுகிறது.

இவைகளை செய்யக் கூடியவர்களின் – முன்னோர்கள் உறவினர்கள் அவ்விடங்களில் அடக்கப்பட்டிருந்தால் இப்படியெல்லாம் கடை கட்டவும் கழிவறைகளைக் கட்டவும் தீவைக்கவும் முன்வருவார்களா? அடக்கப்பட்டவர்கள் நம் முஸ்லிம்கள் சகோதர சகோதரிகள் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

கப்ராளிகளுக்கு அநீதம் இழைக்கப்பட்டு அதில் உண்டாக்கப்படும் எதுவானாலும் அதில் பரக்கத்து கிட்டுமா?

நபி (ஸல்) அவர்கள் கப்ருஸ்தானையும் (ஹமாம்) கக்கூஸ்களையும் தவிர உலகம் பூராவும் மஸ்ஜிதாக இருக்கிறது என சொன்னதன் மூலம் கப்ருஸ்தானில் நாம் வல்ல நாயகனை வணங்குவதற்கு கூட நமக்கு அனுமதி இல்லாத போது அதை எவ்வாறெல்லாம் இன்று பயன்படுத்தப்படுகிறது என்பதை சமுதாயம் உணரவேண்டும். கப்ருகள் இல்லாமலாக்கப்படும் போது எவ்வாறு அவர்களைச் சார்ந்தோரும் சந்ததியினரும் ஜியாரத் செய்து ஸலாம் கூறுவர். கப்ருஸ்தான் சிறிதாக்கப்படும் போது இடநெருக்கடி ஏற்படுமல்லவா?

## பைத்துல் முகத்தஸ்

வெற்றிவீரர் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட (பைத்துல் முகத்தஸ் (ஜெருஸலம்) புனித நகரில் மஸ்ஜித்துல் அக்ஸா அருகில்) மாமில்லா என்ற கப்ருஸ்தானில்

அவரது வீரமிகு தோழர்களும் அடக்கப்பட்டனர். அந்நகர் யூதர்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டபின் அந்த புனிதமிகு கப்ருஸ்தானை பொது பொழுது போக்குத்தளமாக கக்கூஸ்களும், உண்டாக்கி அதில் கார் ஷெட்களை அமைத்த கொடுமையை உலகம் மறந்திட முடியாது. (Jerusalem the key to world peace - 1980) சமூக விரோத முஷ்ரிக்களால் பாபரி மஸ்ஜித்தும் அதனைச் சுற்றி அமைந்திருந்த கப்ருஸ்தானும் தகர்க்கப்பட்டதை நாம் மறந்திட முடியுமா?

கப்ருஸ்தான்களை அசிங்கப்படுத்துவதும், ஆக்கிரமித்து அழிப்பதும் தடுக்கப்படவேண்டும். 'மறைந்தவர்களின்' கப்ருகளை சுவனத்தின் பூங்காவனமாக்கிடு, யா அல்லாஹ் (அல்லாஹும் மஜ்அல் கப்ரஹும் ரவ்லத்து மின் ரியாலுள் ஜன்ன") என நாம் பிரார்த்திக்கின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும்.

## மதினாவில் கப்ருஸ்தான்

அரபு நாடுகளின் பெரும் நகர்களின் மத்தியில் பல கோடி வருமானம் வரும் பகுதியில் கூட கப்ருஸ்தான்களை அப்படியே அழகுபடுத்தி சுற்றுச்சுவரிட்டு பாதுகாக்கப்பட்டு வருவதையும் புனித மதினா நகரில் புனித மஸ்ஜிதுன் நபவிக்கு அருகிலேயே அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரும் சஹாபா பெருமக்களும் அங்கு மறைந்த பாக்கியம் பெற்ற முஸ்லிம்களும் அடக்கப்பட்ட ஜன்னத்து பகீ கப்ருஸ்தான் மற்றும் மக்கா நகரில் அமைந்துள்ள ஜன்னத்துல் முஅல்லா கப்ருஸ்தான்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது என்பதை நம்மில் பலர் நேரிடையாக கண்டு இருக்கின்றனர்.

ஊருக்கள் கப்ருஸ்தான் இருக்கின்றபோது அங்கு கப்ருகளை அடக்காமல் வெளியே இடம் தேர்வு செய்து அங்கு அடக்கப்படவேண்டும் என புதிய வாதம் பேசுபவர்களும் உண்டு. 'அது ஊருக்குள் அமைகிற போது தான் மறைந்த அன்னவர்களை ஜியாரத் செய்யவும் அவர்களுடன் நாமும் அவ்விடத்திற்கு ஒரு நாள் செல்ல வேண்டியுள்ளது' என்ற உணர்வு ஏற்பட்டு நம்மை சீர்திருத்திக் கொள்ள வாய்ப்பு கிட்டுகிறது.

## பிரார்த்தனை

சிலர் தினமும், ஜும்ஆ நாளிலும், சிலர் பெருநாட்களில் மட்டும் ஜியாரத் செய்வர். சிலர் அங்கு ஜியாரத் செய்வதே இல்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "ஜன்னத்துல் பகீ" கப்ருஸ்தானுக்கு செல்லும் போது அஸ்ஸலாமு அலைக்கும் 'தார் கவ்மிம் முஃமினீன் முஃமீன்களின் இல்லத்தாரே உங்களின் மீது சாந்தி உண்டாவதாக! வாக்களிக்கப்பட்டது உங்களுக்கு வந்து விட்டது நாளை மறுமை வரை நீங்கள் தவணை கொடுக்கப்பட்டவர்களாக இருக்கிறீர்கள், நிச்சயமாக நாங்களும் இன்ஷா அல்லாஹ், உங்களுடன் வந்து சேருகின்றவர்கள், தாம் யா அல்லாஹ் இந்த பகீஃ வாசிகளுக்கு மன்னிப்பை அருள்வாயாக! என பிரார்த்தித்ததாக அன்னை ஆயிஷா சித்திகா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் (ஆதாரம் ஃமுஸ்லிம்) மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் கப்ருடைய வேதனையிலிருந்து காப்பாற்றும் படி துஆச் செய்திருக்கிறார்கள்.

அதன்படி நாமும் துஆச் செய்வோமாக, "அல்லாஹ் நம்மையும் மறைந்த முன்னோர்களையும் கப்ரின் வேதனையிலிருந்து காப்பாற்றி அதை சுவனத்தின் பூங்காவனமாக்கியருள்புரிவானாக! ஆமீன்.

வெளியீடு : சன்மார்க்க பிரச்சார சபை, நடுத்தெரு , கீழக்கரை